பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 03 | புதன்கிழமை | 18.12.2024 | அதிர்வு 138

## எம்.பி. பதவியை இழப்பாரா அர்ச்சுனா?



### நீதிமன்றில் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் 05▶




# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம்

## தேசிய மக்கள் சக்தி அரசு உறுதி

“தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம். மக்களின் ஆணையை ஒருபோதும் உதாசீனம் செய்யமாட்டோம்.” - என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 05▶

## கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் தப்பவே முடியாது!

### நீதி அமைச்சர் திட்டவட்டம்



கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் தப்பவே முடியாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த ஆட்சியில் நடந்தேறிய ஊழல், மோசடிகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளால்தான் நாடு அதளபாதாளத்துக்குச் சென்றது.

கடந்த ஆட்சியாளர்கள் நாட்டைச் சீரழித்து குடும்ப ஆட்சியை முன்னெடுத்த 05▶

## ஒரு வருடத்துக்குள் கவிழும் அநுர அரசு

### அடித்துக் கூறுகின்றார் சஜித்



அநுர அரசு ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 05▶




இலங்கைத் தமிழரசு கட்சி அங்குரார்ப்பணம் செய்து இன்றுடன் சரியாக 75 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனை ஒட்டி தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் யாழ்ப்பாணத்தில் உள்ள நினைவு ஸ்தூபியில் இன்று காலை 9 மணிக்கு விசேட நிகழ்வு ஒன்று இடம்பெற இருப்பதாகத் தெரிகிறது.

தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்த பின்னர் இந்த நிகழ்வு அங்கு இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மாவை சேனாதிராஜா ராஜினாமாச் செய்து கடிதம் சமர்ப்பித்துள்ள நிலையில் அதை ஏற்றுக் கொள்வதா என்பது தொடர்பான முடிவை எடுப்பதற்காக கட்சியின் மத்திய குழு வரும் 28ஆம் திகதி மீண்டும் கூடுகிறது.

இது தொடர்பில் வாக்கெடுப்பு நடைபெற இருப்பதை குறிப்பிட்டு மத்திய குழு உறுப்பினர்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி. கூட்ட 05▶




# மக்களை அலைக்கழித்துப் பழிவாங்கும் அரச அலுவலர் சிலர் வடக்கில் உள்ளனர்

## ஆளுநர் கவலையுடன் தெரிவிப்பு

“வடக்கு மாகாணத்தில் அரச அலுவலர்களிடம் அதுவும் புதிதாகப் பதவியேற்ற நிர்வாக அலுவலர்கள் சிலரிடம் மக்களைப் பழிவாங்கும் – அலைக்கழிக்கும் சிந்தனை இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இந்த எண்ணங்களை மாற்றுங்கள். போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களை, எங்கள் மாகாணத்தை நாங்கள் எல்லோரும் இணைந்துதான் உயர்த்த வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும் “வடந்தை” நூல் வெளியீடும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மன்னார் பாலத்திலிருந்து அதிதிகள் கலை ஆற்றுகைகளுடன் பேரணியாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய பொருட்கள் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

“தமிழர்களின் மிக முக்கியமான பண்பாடு விருந்தோம்பல். அதை நாம் இன்று மறந்து செல்கின்றோம். அவ்வாறு நாங்கள் மறந்து செல்பவற்றை நினைவூட்டத்தான் இவ்வாறான விழாக்கள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பண்பாட்டு பெருவிழாவுடன் இணைந்ததாக நடத்தப்படுகின்ற கண்காட்சியைப் பாராட்டுகின்றேன். அந்த ஆக்கங்களை இளையோரே செய்திருக்கின்றார்கள். அவர்களுக்குச் சிறப்பான எதிர்காலம் இருக்கின்றது.

எமது சுற்றாடலை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் சிறுவயதிலிருந்தே பழக்க வேண்டியிருக்கின்றது. அதற்காக



ஒரு பாடவேளையை ஒதுக்குவது தொடர்பில் அமைச்சின் செயலருடன் கலந்துரையாடவிருக்கின்றேன். வீதிகளில் குப்பைகளை வீசி எமது மாகாணத்தை அசிங்கமாக்குவதில் அநேகர் படித்தவர்கள்தான்.

மாவட்டச் செயலராக கடந்த காலத்தில் நான் இருந்த போது கூட இவ்வாறு பொதுமக்கள் சந்திப்பதற்கு வரவில்லை. சின்ன விடயங்களுக்கும் இப்போது ஆளுநர் அலுவலகத்துக்கு வருகின்றார்கள்.

அந்தப் பொதுமக்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள அரச திணைக்களங்களில் அந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று வருகின்றார்கள்.

பொதுமக்கள் தினமான திங்கட்கிழமை (16) இரவு 8 மணியைத் தாண்டியும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்திருந்தேன்.

முன்னைய காலத்தில் குறைந்தளவு பணியாளர்களுடன் மக்களுக்கு திறம்பட சேவைகள் வழங்கப்பட்டன. இப்போது அதிகரித்த ஆளணி மற்றும் கணினி வளங்கள் இருந்தாலும் மக்களுக்குச் சிறப்பான சேவைகள் வழங்கப்படவில்லை.

மக்கள் தமது பிரதேச அல்லது கீழ்நிலை அலுவலர்களின் ஊடாக ஒரு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என மேல்நிலை அலுவலர்கள் அல்லது திணைக்களத் தலைவர்களிடம் சென்றால், அந்த மக்களுடன் எரிந்து விழுந்து அவ்வாறு ஏன் சென்றீர்கள் எனக் கேட்டு, அந்தச் தேவையை நிறைவேற்றிக்கொடுக்க மறுக்கின்ற கீழ்நிலை அலுவலர்கள் இப்போது இருக்கின்றார்கள். இவர்களால் எப்படி இப்படிச் சொல்ல முடிகின்றது? இவர்களின் மனநிலையை நினைத்து கவலையடைகின்றேன்.” – என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், நாட்டுக் கூத்து கலைஞர் கலாபூஷணம் செ.மாசிலாமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இளங்கலைஞர் விருதை 10 பேரும், கலைக்குரிசில் விருதை 13 பேரும், சிறந்த நூல்களுக்கான விருதை 14 பேரும் பெற்றுக்கொண்டனர்.










# காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு

காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய அரச அதிபர், "பொது மக்களுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான சேவை வழங்கும் உத்தியோகத்தர்களாக பதிவாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளனர்.

இவர்கள் திருமணம், பிறப்பு, இறப்பு மற்றும் காணிப் பதிவுகள் தொடர்பான சேவையை வழங்கும் நோக்குடன் செயற்படும் பிரதானமான உத்தியோகத்தர்களாகவும், பொது மக்களின் அன்றாட கருமங்களுடன் தொடர்புபட்டுள்ள பொது நலன் சார்ந்தவர்களாக மக்களுக்குச் சேவையாற்றும் உன்னதமான பொறுப்புள்ள உத்தியோகத்தர்களாகவும் விளங்குகின்றனர்.

பதிவாளர் நாயகம் பதிவியேற்று ஒரு வருடத்துக்குள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

பதிவாளர் நாயகத்துடன் மாவட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடியுள்ளோம்.

இந்தச் செயலமர்வானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறுவது சிறப்பான விடயமாகும். இது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையை மென்மேலும் வினைத்திறனாக வழங்குவதற்கு உந்துதலாக அமைந்துள்ளது. அதற்காகப் பதிவாளர் நாயகத்துக்கு நன்றி தெரிவிக்கின்றோம்." – என்றார்.

இந்தச் செயலமர்வுக்குச் சிறப்பு அதிதியாக வருகை தந்த பதிவாளர் நாயகம் டபிள்யூ.ஆர்.என்.எஸ். விஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதம் தடவையாக இந்தச் செயலமர்வு நடைபெறுகின்றது. இன்று அரச அதிபருடன் கலந்துரையாடியபோது, சில தேவைப்பாடுகள் குறித்து தெரியப்படுத்தினார். எதிர்காலத்தில் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பதிவாளர்களுடன் இணைந்து சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கும் திட்டமாக இந்தச் செயலமர்வு அமையவுள்ளது." – என்றார்.

இந்த நிகழ்வில் உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி கருணாரத்ன, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதிப் பதிவாளர் நாயகங்கள், நில அளவை உத்தியோகத்தர்கள், திணைக்களத்தைச் சேர்ந்த வடக்கு, கிழக்கு மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.











# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கையைச் சேர்ந்த அகதிகள் மீளவும் நாட்டுக்கு வரவேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகவும் இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் தேசிய அலுவலகத் தலைவராகப் பணியாற்றிய சஞ்சிதா சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளை யு.என்.எச்.சி.ஆர். அமைப்பு வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர், அதற்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

குறிப்பாக இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டதில் யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் பங்கு அளப்பரியது என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குதல், வீடமைப்புத் திட்டம், வாழ்வாதார உதவி மற்றும் வேலை வாய்ப்பு என்பனவற்றை உறுதிப்படுத்தி தமிழகத்தில் தற்போதும் தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீள நாட்டுக்கு அழைத்து வருவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்திய ஆளுநர், அதற்குரிய திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கான ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.




# இலங்கை மனவளக்கலை மன்றத்தின் தியான நிகழ்வு

சர்வதேச தியான தினத்தை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தினர் “மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் தியானம்” எனும் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு அறிவுத்திருக்கோயிலில் நடைபெறவுள்ளது.

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் தீர்மானத்தை ஏற்று இந்த வருடம் முதல், டிசம்பர் 21ஆம் திகதியை சர்வதேச தியான தினமாக அனுஷ்டிக்க ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டு தசாப்தத்துக்கு மேலாக இலங்கையில் மனவளக்கலை யோகா பயிற்சிகளை இலங்கை மனவளக்கலை மன்றம் வழங்கி வருகின்றது.

மனவளக்கலை யோகாவில் தியானம் என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பயிற்சியாக இருக்கின்றது.

“மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் தியானம்” எனும் நிகழ்ச்சியின் மூலம் அன்றாட வாழ்க்கையில் மனதை எப்படி அமைதியாகவும் ஒருநிலைப்படுத்தியும் தியானம் செய்வது? தியானத்தின் படிமுறைகள் மற்றும் வகைகள் என்ன? தியானத்தின் மூலம் அன்றாட வேகமான வாழ்க்கையில் எப்படி மனதை அமைதிப்படுத்துவது? எனப் பல விளக்கங்களையும், தியானத்தின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் தலைவர் அ.மதுரைவீரன் கேட்டுக்கொண்டுள்ளார். தொடர்புகளுக்கு - +94 71 404 2300

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்தல் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்தக் கடிதம் கிடைத்ததும் மாவை சேனாதிராஜா கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்திற்கு தொலைபேசி அழைப்பு எடுத்து, அப்படி வாக்கெடுப்பு நடைபெறுவதான தீர்மானம் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டதா என்று வினாவி இருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

இதுகுறித்து கட்சியின் இன்னொரு மூத்த உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

"கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களை செவிமடுக்க முடியாத அல்லது புரிந்து கொள்ள முடியாத நிலையில் மாவை இருக்கின்றாரா அல்லது மறதியின் உச்சம் அவரைத் தொட்டு விட்டதா?" – என்று அந்த சிரேஷ்ட உறுப்பினர் கேட்டார்.

"மாவையை முன்னிறுத்தி அதிகம் சண்டப் பிரசண்டம் பண்ணும் கட்சியின் சில உறுப்பினர்களின் அத்துமீறல்களினால் கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி. மனமுடைந்திருக்கிறார் என்று தெரிகிறது. தப்பித் தவறி மாவை தரப்பின் குத்துக்கரணங்கள், தொல்லைகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் 'எனக்கு வேண்டாம் பொதுச் செயலாளர் பதவி' என்று மருத்துவர் சத்தியலிங்கம் ஒதுங்கிக் கொண்டால் அடுத்த நிலையில் இருக்கும் சிரேஷ்ட துணைச் செயலாளர் சுமந்திரனின் கைகளில் கட்சியின் பதில் செயலாளர் பதவி விழுந்து விடும்" – என்று சுட்டிக்காட்டும் அந்த சிரேஷ்ட உறுப்பினர், "அப்படி நடந்தால் மாவை தரப்பில் துள்ளி குதிப்பவர்கள் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த இக்கட்டை எதிர் நோக்க வேண்டி வரும்" என்றும் சொன்னார்.

கடந்த 75 வருடங்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்தவர்களின் விவரங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தமது முகப் புத்தகத்தில் வெளியிட்டு இருக்கிறார். அதன் சுருக்கத்தைக் கீழே இணைக்கின்றேன்.

யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யுத்த காலத்தில் தமிழரசு கட்சி முழு அளவில் இயங்காவிட்டாலும் மற்றைய காலத்தில் யார், யார் கட்சியின் தலைவர்களாக இருந்தார்கள் என்பது நோக்குவது பொருத்தமானது.

தந்தை செல்வா கூட கட்சியின் ஸ்தாபகராக இருந்த போதிலும், தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியை மாவை சேனாதிராஜாவைப் போல கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

1977 காங்கேசன்துறை தொகுதியில் கட்சியின் தளபதி அமிர்தலிங்கம் போட்டியிடுவதற்குத் தாமே தமக்குரிய அத்தொகுதியை விட்டுக் கொடுத்தார் என்று இப்போது பிரபலாபிக்கும் மாவை சேனாதிராஜா தலைமைப் பதவியைக் கட்டிப்பிடிப்பதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதுதான் கட்சி மீண்டெழுவதற்கான ஒரே வழியாக இருக்க முடியும்.

இதுவரை நடந்த தமிழரசு மாநாடுகளும் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களும்:–

1. 1951 ஏப்ரல் 13,14,15 இல் திருகோணமலையில் – தலைவராக தந்தைசெல்வா.
2. 1953 ஜனவரி,01 இல் யாழ்ப்பாணத்தில் – தலைவராக தந்தைசெல்வா,
3. 1955 ஏப்ரல் 16,17 இல் திருகோணமலையில் தலைவராக கு.வன்னியசிங்கம்.
4. 1956 ஓகஸ்ட் 17,18,19 இல் திருகோணமலையில் தலைவராக கு.வன்னியசிங்கம்.
5. 1957 ஜுலை 27,28 இல் மட்டக்களப்பில் தலைவராக கு.வன்னியசிங்கம்.
6. 1958,மே 23,24,25 இல் வவுனியாவில் தலைவராக இராஜவோதயம்.
7. 1961 ஜனவரி 21 இல் யாழ்ப்பாணத்தில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்.
8. 1962 ஓகஸ்ட்,31 இல் மன்னாரில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்.
9. 1964 ஓகஸ்ட்,21,22,23 இல் திருகோணமலையில் தலைவராக தந்தை செல்வா.
10. 1966 ஜுன் 23,24,25 இல் கல்முனையில் தலைவராக டாக்டர் நாகநாதன்.
11. 1969 ஏப்ரல் 07,08,09 இல் யாழ்ப்பாணம் உடுவிலில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்.
12. 1973 செப்டம்பர் 07,08,09 இல் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் தலைவராக அ.அமிர்தலில்கம்.
13. 2010 ஜனவரி,13 இல் யாழ்ப்பாணம் நல்லூரில் தலைவராக இரா.சம்பந்தன்.
14. 2012 மே,26,27 இல் மட்டக்களப்பில் தலைவராக இரா.சம்பந்தன்.
15. 2014 செப்டம்பர் 06,07 இல் வவுனியாவில் தலைவராக மாவை சேனாதிராசா,
16. 2019 ஜுன் 29,30 இல் யாழ்ப்பாணத்தில் தலைவராக மாவை.சேனாதிராசா.

---

## ஒரு வருடத்துக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"போலி வாக்குறுதிகளை வழங்கி போலிக் கல்வித் தகைமைகளுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்தது.

அதியுயர் சபையில் போலிக் கலாநிதிப் பட்டத்துடன் சபாநாயகர் கதிரை அலங்கரித்தவர், ஒரு மாதத்துக்குள் உண்மை நிலைமை வெளியில் தெரியவர பதவியை இராஜினாமா செய்தார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இனியாவது விழிப்படைய வேண்டும்.

ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்த அரசு, ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி விரைவில் மலரும்." – என்றார்.

## எம்.பி. பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஒஷல ஹேரத் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் மஹேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டுக் குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவை எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு உண்மைகளை உறுதிப்படுத்த நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலின்போது அரச வைத்தியராகக் கடமையாற்றிய நிலையில், வேட்புமனுவைச் சமர்ப்பித்தார் என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சேவையிலிருந்து விலகாமல் இவ்வாறு வேட்புமனுத் தாக்கல் செய்வது சட்டவிரோதமானது என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், அது தேர்தல்கள் சட்ட விதிகளுக்கு முரணானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரசியல் சாசனத்தின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தி, அந்த ஆசனத்தை செல்லுபடியற்றதாக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

---

## கடந்த ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படியால்தான் மக்கள் அணிதிரண்டு, அந்த ஆட்சியாளர்களை விரட்டியடித்தார்கள்.

தற்போதைய ஆட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மக்களால் நிறுவப்பட்ட ஆட்சி. நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களால் நிறுவப்பட்ட ஆட்சி. எனவே, கடந்த ஆட்சியில் குற்றமிழைத்தவர்கள் எவராக இருந்தாலும் தப்பவே முடியாது." – என்றார்.

---

## வழங்கிய வாக்குறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஜனாதிபதித் தேர்தலின்போதும், நாடாளுமன்றத் தேர்தலின்போதும் நாம் வழங்கிய வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவோம்.

இரண்டு தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்களின் அமோக ஆணை கிடைத்துள்ளது. மாற்றத்தை விரும்பிய மக்கள், எம்மை நம்பி வைத்துள்ளார்கள். நாம் முன்வைத்த கொள்கைத் திட்டங்களை ஏற்றே எமக்கு அவர்கள் வாக்களித்துள்ளார்கள். எனவே, மக்களின் ஆணையை ஒருபோதும் உதாசீனம் செய்யமாட்டோம்.

எதிரணியினர் எம் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சிக்கலாம். ஆனால், நாம் உண்மையாக – நேர்மையாகச் செயற்படுவதால் எதற்கும் அஞ்சமாட்டோம்." – என்றார்.

# முல்லைத்தீவில் விபத்தில் படுகாயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழப்பு

முல்லைத்தீவில் வீதியில் நடந்து சென்றபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நபர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, குமாரபுரம், முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமி சிவானந்தன் (வயது 66) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், இவர் கடந்த 9ஆம் திகதி வேலைக்குச் சென்றுவிட்டு இரவு 10 மணியளவில் வீடு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். ஊற்றம்பலப் பிள்ளையார் கோயிலடியில் அவர் மீது மோட்டார் சைக்கிள் மோதி காலில் படுகாயம் ஏற்பட்டது. இந்நிலையில், வீட்டுக்குச் செல்ல முடியாத அவர் வீதியோரமாகப் படுத்திருந்தார். மறுநாள் காலை, அந்த வீதியால் வந்த ஒருவர் அவரை ஓட்டோவில் ஏற்றிச் சென்று வீட்டில் சேர்த்துள்ளார்.

அதன்பின்னர் அவர் சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

# புதிய தவணை ஆரம்பிக்க முன் சீருடைகளை வழங்க பணிப்புரை



பாடசாலைகளில் புதிய தவணை ஆரம்பிக்க முன்னர் மாணவர்களுக்குச் சீருடைகளை வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்குச் சீருடைகள் அனுப்பப்படவுள்ளன என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெள தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைகளுக்கான முழுத் தொகை துணியையும் அன்பளிப்பாக வழங்கச் சீன மக்கள் குடியரசு முன்வந்துள்ளது.

# அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் துணைத் தலைவி பிரதமருடன் சந்திப்பு







அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் துணைத் தலைவியான திருமதி சாங் டோங்மேய், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து, பெண்கள் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

திருமதி சாங் டோங்மேய் மற்றும் அவரது தூதுக்குழுவினரை வரவேற்ற பிரதமர் கலாநிதி அமரசூரிய, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீடித்த நட்புறவைப் பாராட்டினர்.

இந்த கலந்துரையாடல் பெண்களின் சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு ஆகியவற்றில் பகிரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை மையமாகக் கொண்டிருந்தது.

பெண்களின்தொழிற்படைஈடுபாடுமற்றும்கீழ்மட்டபிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உட்பட சீனாவின் முன்னேற்றங்கள் குறித்து திருமதி சாங் டோங்மேய் இதன்போது விளக்கினார்.



# ஜெனிவா சமவாயங்களின் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நிகழ்வு

ஜெனிவா சமவாயங்களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸர்லாந்து தூதரகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிகழ்வும், கண்காட்சியும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில் அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸர்லாந்தின் பிரதித் தூதுவர் ஒலிவர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தூதுக்குழுத் தலைவர் சப்பாஸ், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, சட்டத்தரணியும் பேராசிரியருமான வி.ரி. தமிழ்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் ஆட்சேப வழக்கு

யாழ்ப்பாண மாவட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் புதிய சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்திருந்த மனு நீதியரசர்கள் சோபித ராஜகருணா மற்றும் மஹேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு ஆயத்தின் குழு முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுவை ஜனவரி 15ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு உண்மைகளை உறுதிப்படுத்த நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

இராமநாதன் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலின் போது அரச வைத்தியராகக் கடமையாற்றிய நிலையில், வேட்பு மனுவை சமர்ப்பித்தார் என மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார். அரச சேவையிலிருந்து விலகாமல் இவ்வாறு வேட்புமனு தாக்கல் செய்வது சட்டவிரோதமானது என சுட்டிக் காட்டியுள்ள மனுதாரர், அது தேர்தல்கள் சட்ட விதிகளுக்கு முரணானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரசியல் சாசனத்தின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க அவர் தகுதியற்றவர் எனப் பிரகடனப்படுத்தி, அந்த ஆசனத்தை செல்லுபடியற்றதாக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அரச சேவையிலிருந்து ஒழுங்கு நடவடிக்கையின் பெயரில் இடைநிறுத்தப்பட்ட அரச அதிகாரி ஒருவர் அந்த ஒழுங்கு நடவடிக்கை விசாரணை முடிவதற்கு முன்னர் பதவியை இராஜினாமாச் செய்து அரச சேவையிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறுவது - அல்லது விடுவிக்கப்படுவது - என்பது சுலபமான விடயம் அல்ல. அதே சமயம் வைத்தியர் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான காலம் முடிவடைவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னரே விளக்கமறியலில் இருந்து வெளியே வந்தார். அந்த ஓரிரு தினங்களில் அவர் அரசு சேவையிலிருந்து ராஜினாமாச் செய்யும் தமது கடிதத்தை மேலிடத்துக்கு அனுப்பி இருந்தால் கூட, அது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதான பதில் அல்லது உறுதி அவருக்கு கிட்டி இருக்குமா என்பது கேள்விக் குறியே.

இந்தப் பின்புலத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு நான்கு விதங்களில் ஒன்றாக அமையலாம்.

ஒன்று - வழக்குத் தள்ளுபட்டு அர்ச்சுனாவின் எம்.பி. பதவி உறுதிப்படுத்தப்படலாம்.

இரண்டாவது - அவர் பதவி இழக்க, அவரது சுயேச்சைக் குழுவில் பட்டியலில் அடுத்த நிலையில் இருக்கும் என். கௌசல்யா எம்.பியாக நியமிக்க வழி ஏற்படலாம்.

மூன்று - அந்த சுயேச்சை குழுவின் தலைமை வேட்பாளர் அர்ச்சுனாவாக இருக்கின்ற போது அவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என்றால், அவர் தலைமையிலான பட்டியலும் தகுதியற்றதாக தள்ளப்படக்கூடிய வாய்ப்பு உண்டு. அப்படி நேர்ந்தால் தமிழரசுக் கட்சிக்கு யாழ் மாவட்டத்தில் இன்னொரு எம்.பி. ஆசனம் கிடைக்கும்.

நான்கு - அர்ச்சுனாவின் தேர்தல் தெரிவு தள்ளுபடியாகி, அவரது சுயேச்சைக் குழுவுக்கு விழுந்த வாக்குகளும் செல்லுபடியற்ற வாக்குகளாகக் கருதப்பட வேண்டும் என்ற முடிவை நீதிமன்றம் எடுக்குமாயின், அவரது இடத்திற்கான எம்.பி. பதவி, தமிழரசுக்கு அல்லாமல் சங்கு சின்னத்தில் போட்டியிட்ட ஒருவருக்கு கிட்டும்.

யாழ். மாவட்ட வாக்கு எண்ணிக்கைக் கணக்குகள் அந்த நிலைமையைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இனி, நீதிமன்றத் தீர்ப்பு இவ்விடயத்தில் எப்படி அமையும் என்பதில்தான் அனைத்தும் தங்கியுள்ளன.

எது, எப்படியாயினும், அர்ச்சுனாவை எதிர்த்து யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் எவரும், இந்த விடயம் குறித்துப் பரவலாகப் பேசப்பட்டபோதும்-வைத்தியர்அர்ச்சுனாதேர்தலில் இறங்க முன்னர் தமது அரச உத்தியோகத்தை முறையாக விட்டு விலகவில்லை என்ற பேச்சு பரவலாக அடிபட்ட போதும் - வழக்குத் தாக்கல் செய்ய முன்வரவில்லை என்பதும், தென்னிலங்கையிலிருந்து அத்தகைய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

# மின் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்க முடியும் என்கிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் 11 வீதத்தால் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படும் எரிபொருளின் விலைகளையும் மேலும் குறைக்க முடியும் என ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகள் குறித்த பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்த யோசனை, பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தால் மின்னுற்பத்திக்காக வழங்கப்படும் எரிபொருளுக்கான விலை தொடர்பான அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் இந்த மாற்று யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 08 ஆம் திகதி வரை எழுத்துமூலமான கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன், மாகாண மட்டத்தில் 9 அமர்வுகள் மூலம் வாய்மொழி கருத்துகள் பெறப்படவுள்ளன என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவு தொடர்பான எழுத்துபூர்வ யோசனைகளை கைெழஉளிரஉளட.பழஎ.டம என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப முடியும்.

076 427 10 30 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கும் பொதுமக்கள் தமது யோசனைகளை முன்வைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு தபால் மூலமாகவும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

எவ்வாறாயினும், 2025ஆ ம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்த மின்சார சபை தற்போது முன்மொழிந்துள்ளது.

# ஜனாதிபதி நிதியத்தில் பணம் பெற்றுக்கொண்ட எம்.பிகளின் பெயர் பட்டியல் வெளியானது!




2005 - 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியலை சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் நேற்று பகிரங்கப் படுத்தினார்.

முன்னாள் பிரதமர் தி.மு ஜயரத்னவுக்கு அதிகூடிய தொகை வழங்கப்பட்டதாகவும் அவருக்கு 3 கோடி ரூபா வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பணம் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்கள்...

எஸ்.ஏ ஜகத் குமார - 10 இலட்சம் ரூபா
கே.பி.எஸ் குமாரசிறி- 953,430 ரூபா
ஜயலத் ஜயவர்தன - 10 இலட்சம் ரூபா
நாமல் குணவர்தன - 10 இலட்சம் ரூபா
தர்மதாச பண்டா - 10 இலட்சம் ரூபா
விதுர விக்கிரமநாயக்க - 15 இலட்சம் ரூபா
விமலவீர திசாநாயக்க - 30 இலட்சம் ரூபா
லகீ ஜயவர்தன - 16.2 இலட்சம் ரூபா
பீ.சந்திரசேகரன் - 14 இலட்சம் ரூபா
ஜோன் அமரதுங்க - 40 இலட்சம் ரூபா
ஜோசப் மைக்கல் - 27 இலட்சம் ரூபா
டீ.பி ஏக்கநாயக்க - 48 இலட்சம் ரூபா
டபிள்யூ.எம்.எப் பொன்சேக்கா - 55 இலட்சம் ரூபா
சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க - 90 இலட்சம் ரூபா
எலிக் அளுவிஹாரே - 22 இலட்சம் ரூபா
ரஞ்சித் அளுவிஹாரே - 8.6 இலட்சம் ரூபா
ராஜித சேனாரத்ன - 100 இலட்சம் ரூபா
கெஹெலிய ரம்புக்வெல்ல - 110 இலட்சம் ரூபா
எம்.கே.ஏ.டி.எஸ் குணவர்தன - 112 இலட்சம் ரூபா
ரஞ்சித் சொய்ஸா - 188 இலட்சம் ரூபாய் மற்றும் தி.மு ஜயரத்ன - 300 இலட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்டனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவு

## பிரதமர் அறிவிப்பு

2025 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 25,000 மாணவர்களுக்கு 6,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது பாடசாலை மாணவர்களில் 55 வீதத்திற்கும் அதிகமானோர் அதிக பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர்.

கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டினார்.

# தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை




கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த பொதுத் தேர்தலுக்கான தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக, மேற்படி தேர்தலில் போட்டியிட்ட 8,888 வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தது.

இந்தநிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவு அறிக்கைகள் மாவட்ட செயலகத்திலுள்ள தெரிவத்தாட்சி அலுவலரின் காரியாலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, ஒவ்வொரு மாவட்ட செயலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள, அந்தந்த மாவட்டத்தில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளினதும் சுயேட்சை குழுக்களினதும் வேட்பாளர்களின் செலவு அறிக்கைகளை நேற்று முதல் பொதுமக்கள் பார்வையிட முடியும்.

இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இன்று முதல் 10 நாட்களுக்கு வாக்காளர்களுக்குக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அதற்கமைய, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சட்டமா அதிபரால் குறித்த வேட்பாளர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும்."
– என்றார்.



# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறியது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

"கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்துடனான சகல செயற்பாடுகளையும் தற்போதைய அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாதையிலேயே கொண்டு செல்கிறது."

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று கருத்துரைத்த அவர், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முழுமையாக மீறியுள்ளதாக தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசாங்கம் தெரிவானதிலிருந்து இதுவரையில் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் யோசனைகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர், கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட உடன்படிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாக அறிவித்திருந்தது.

இதன்படி, சர்வதேச இறையாண்மை பத்திர உரிமையாளர்களுடனான கடன் மறுசீரமைப்பு மற்றும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றின் போது அரசாங்கம் பின்பற்றிய நிலைப்பாடு தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

எதிர்க்கட்சியிலிருந்த போது சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை விமர்சித்த தேசிய மக்கள் சக்தி, தற்போது அதனையே முன்கொண்டு செல்கின்றது.

இது மக்களின் ஆணையைக் காட்டி கொடுக்கும் செயற்பாடாகும். தேர்தலுக்கு முன்னர் மின்கட்டணத்தை மூன்றில் ஒரு பங்கை குறைப்பதாகக் கூறிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு தற்போது அவ்வாறு செய்வதில் என்ன? சிக்கல் உள்ளது.

அதேபோன்று எரிபொருள் கட்டணத்தைக் குறைப்பதாகக் கூறிய அரசாங்கம் தற்போது வரை அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

ஆரம்பத்தில் எரிபொருள் விலை சூத்திரத்தை விமர்சித்தவர்கள் தற்போது அதனைப் பின்பற்றியே எரிபொருள் விலையைத் திருத்துகின்றனர்.

ஓய்வூதிதாரர்களுக்கான கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளது.

விவசாய சேதங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என ஆரம்பத்தில் கூறிய அரசாங்கம் தற்போது அவ்வாறு செயற்படுவதில்லை ."– என்றார்.

# இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வளர்ச்சி


இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 5.5 சதவீத நேர்மறை மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 29 லட்சத்து 87,544 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் 31 லட்சத்து 51,941 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், விவசாய பொருளாதார நடவடிக்கைகள் 3 சதவீதமாகவும், தொழில்துறை நடவடிக்கைகள் 10.8 சதவீதமாகவும், சேவை பொருளாதார நடவடிக்கைகள் 2.6 சதவீதமாகவும் விரிவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 77 நாடுகளில் வசிக்கும் இலங்கையருக்கு இணையவழி மூலம் பிறப்பு சான்றிதழை




77 நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு இணையவழி மூலம் பிறப்பு சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பதிவாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கு வெளியே வசிக்கின்ற 77 நாடுகளில் வசிக்கின்ற பிரதிகள் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களை இணையவழி மூலம் பெற முடியும் என்று குறிப்பிட்டார்

இந்த விடயம் தொடர்பில் இரு வாரங்களுக்கு முன்பாக 7 நாடுகளோடு இணைந்து கலந்துரையாடியதாகவும் சுட்டிக்காட்டினார்

வெளிநாட்டில் இருப்பவர்களும் இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பதிவாளர்கள் பொது மக்களுக்கு சேவையை வழங்கும் பொறுப்பு வாய்ந்த பணியில் உள்ளமையை சுட்டிக்காட்டினார்

பிறப்பு, இறப்பு, விவாகரத்து தொடர்பான சேவைகளை டிஜிட்டல் முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அடையாள அட்டைகளை விநியோகிக்கின்ற போது ஆட்பதிவு திணைக்களம் மற்றும் பதிவார் திணைக்களம் இணைந்து செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்

# 9,500 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி




கடந்த 4 ஆம் திகதியிலிருந்து நேற்று மதியம் 12 மணி வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு 9,500 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் பேச்சாளர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இந்த காலப்பகுதியில் 3,300 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 6,020 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அனுமதிப் பத்திரமின்றி அரிசியை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 20 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# யாழ். தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்

## மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று

தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் தலைமையுரையாற்றிய யாழ். மாவட்ட அரச அதிபர், ”ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவும், மாவட்ட செயலகத்தில் 2024.12.11 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவும், தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்புச் செயற்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்காகவும், அறநெற–சார் செயற்பாடுகளுக்காகவும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்த வேண்டும்.

இந்தத் தீர்மானமானது மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டது.

பிள்ளைகளின் நலன் கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பிலும் நிறுவன உரிமையாளர்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.” – என்றார்.

மேற்படி கலந்துரையாலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

01) தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புக்களுக்கான தனியார் கல்வி செயற்பாடுகள் மற்றும் குழு வகுப்புக்களை வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும், ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்த வேண்டும். பிரதேச செயலாளர்கள் தமது உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்படி விடயத்தைக் கண்காணித்து அறிக்கையிடுதல் வேண்டும்.

02) தனியார் கல்வி நிலைய வாசலில் பெற்றோர்கள்



காத்திருப்பதனால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றன. ஆதலால் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் / நிர்வாகிகள் இதற்கான சரியான பொறிமுறையை மேற்கொண்டு போக்குவரத்து நெருசலைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்தப் பொறிமுறையைத் தாமாக நடைமுறைப்படுத்தத் தவறும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பில் பொலிஸாரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

03) பிரதேச செயலாளர்கள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் தமது பிரதேசங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புக்கள் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# ஜீ.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட ஓட்டோவை கடத்தி வசமாகச் சிக்கிய கொள்ளையர் குழு!

## கலஹா பகுதியில் சம்பவம்

(மஸ்கெலியா நிருபர்)

வங்கிகள், கடைகள், வீடுகளில் இடம்பெற்ற கொள்ளை உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று சிறையிலிருந்து விடுதலையாகி வந்து மீண்டும் கொள்ளைகளில் ஈடுபட ஓட்டோவைக் கடத்தி ஆயத்தமான வேளை கலஹா பொலிஸாரினால் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டனர்.

மேற்படி சந்தேக நபர்களில் கடந்த வருடம் கம்பளை நகரில் ஹட்டன் நஷனல் வங்கியில் காவலாளியை கட்டி வைத்துவிட்டு 97 லட்சம் ரூபா பணத்துடன் பண பரிமாற்று இயந்திரத்தைக் கடத்திச் சென்ற புத்தளம் கனல் வீதியைச் சேர்ந்த இரு சகோதரர்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தைச் சேர்ந்த அப்துல் பாச்சா அப்துல்லா, அமீர் பாச்சா ரஹ்மான், கட்டுகஸ்தோட்டை ரணவனா வீதியைச் சேர்ந்த அப்துல் ஹசன், அப்துல் ரில்வான், நாவலப்பிட்டி, கீழ் கொரக்க ஓயவைச் சேர்ந்த ஜெலாப்தீன் மொஹமட் பைரூஸ் மற்றும் கம்பளை இல்லவத்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட ஐந்து பேர்கொண்ட இளைஞர் குழுவினரையே தாங்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்

நாவலப்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய பிரதேசத்தைச் சேர்ந். இந்தச் சந்தேக நபர்கள் போதைப்பொருள் கடத்தல், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுட்டவர்களென இனம் காணப்பட்டுள்ளனர் எனொ பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மேற்படி குழுவினர் சில தினங்களுக்கு முன்னரே சிறைச்சாலையில் இருந்து வெளிவந்துள்ளனர். அவர்கள் பேராதனை கிரிபத்கும்புர பிரதேசத்திற்கு சென்று ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி தெல்தோட்டைப் பகுதிக்குச் சென்றுள்ளனர்

காலை பத்து மணிக்கு சென்ற ஓட்டோவும் சாரதியும் மாலை ஐந்து மணி ஆகியும் திரும்பவில்லை. சக நண்பர்கள் தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட போதும் பதில் இல்லை. அதனால் ஓட்டோ உரிமையாளருக்கு விடயம் தெரிவித்திருக்கின்றனர். மேற்படி ஓட்டோவில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டிருந்தமையால், அதனை ஆராய்ந்த பொழுது ஓட்டோ தெல்தோட்டை பகுதிக்குச் சென்று பின்னர் ஹட்டன் நோர்வூட் பகுதியில் பயணித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை தெல்தோட்டையில் உள்ள ஓட்டோச் சாரதியின் உறவினருடம் தொடர்பு கொண்டு விடயத்தை கூறியதையடுத்து தெல்தோட்டையில் ஓட்டோ முன்னர் நிறுத்தப்பட்டிருந்த பகுதியில் மேற்கொண்ட சோதனையின் போது தெல்தோட்டை லூல்கந்துர பகுதியில் சாரதி மயங்கிய நிலையில் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அது குறித்து கலஹா பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது.

பொலிஸார் மீண்டும் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பத்தை ஆராய்ந்து பார்த்த பொழுது ஓட்டோ நோவூட்டில் இருப்பதை அவதானித்தனர். பொலிஸ் குழுவினர் இரவு அங்கு சென்று கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஓட்டோ நாவலப்பிட்டி கொரக்க ஓயா பிரதேசத்தில் இருப்பது அவதானிக்கப்பபட்டது.

வட்டவளை பிரதேசத்தில் இருந்து பொலிஸ் குழுவினர் திரும்பி நாவலப்பிட்டி கீழ் கொரக்கா ஓயா பகுதியிலுள்ள வீடொன்றில் ஓட்டோ நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்து அந்த வீட்டைச் சுற்றிவளைத்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். ஓட்டோ உட்பட பொருள்களைக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கண்டி இலக்கம் 02 நீதிமன்றதின் மேலதிக நிதிவானின் முன் நிறுத்திய பொழுது சந்தேகநபர்களை எதிர் வரும் 19 ஆம் திகதி (நாளை) வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.


# மரண அறிவித்தல்



சாவகச்சேரி கல்வயலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது மணல்தரை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி
## செல்லக்குட்டி சேதுப்பிள்ளை

அவர்கள் 17.12.2024 அன்று காலமானார்.

அன்னார் அமரர்கள் அருணாசலம் மகேஸ்வரியின் சிரேஷ்ட புதல்வியும் ந.செல்லக்குட்டியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் மட்டுவில் மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும் வைத்திய நிபுணர் (பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை) செ.செல்வகணேஷ் (யாழ் போதனா வைத்தியசாலை), செ.செல்வவரதர் (குடியேற்ற உத்தியோகத்தர் சாவகச்சேரி பிரதேச செயலகம்), வைத்திய நிபுணர் (குழந்தை வைத்தியர்) திருமதி.கு.கலைச்செல்வி (மாஞ்சோலை வைத்தியசாலை ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கதிரவேற்பிள்ளை, அமரர் ஸ்ரீ செல்லம்மா, க.தங்கரத்தினம், செல்வகுமரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செ.சிந்துஜா, செ.பிருந்தா (ஆசிரியர் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் வரணி), மு.குருபரன் (விரிவுரையாளர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்- அறிவியல்நகர்) ஆகியோரின் மாமியாரும் அட்சயன், ஆரபி, ஆத்யா, அபிசாந், அபினா, அபிதேவ், ஆருத்ரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18.12.2024 பிற்பகல் கொக்குவில், கருவேலடி வீதியிலுள்ள மகன் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

0777711091.
0777716191.
0777716192.

தகவல்
குடும்பத்தினர்.

# இமாலயப் பிரகடனத்தைத் தேசிய உரையாடலாக தொடர மக்கள் இயக்கமொன்றை உருவாக்குங்கள்

## யாழ்., கிளிநொச்சி உரையாடலில் பங்கேற்பாளர்கள் வலியுறுத்து

இமாலயப் பிரகடனத்தைத் தொடர்ந்தும் தேசிய உரையாடலாக முன்னெடுத்துச் செல்வதற்கான பணியை மக்கள் இயக்கமொன்றை உடனடியாக உருவாக்கி ஒப்படையுங்கள் என்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட மட்டத்திலான உரையாடல்களில் ஆணித்தனமாக வலியுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய இமாலயப் பிரகடனம் பற்றிய உரையால் கடந்த 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்தது.

இதன்போது பௌத்த, இந்து, காத்தோலிக்க, இஸ்லாமிய சமயத்தலைவர்கள் மற்றும் பல்லின சிவில் அமைபபின் பிரதிநிதிகள், இளையோர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வின் போது, இமாலயப்பிரகடனம் தேசிய மட்டத்தில் உரையாடப்பட வேண்டிய தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. ஆகவே தேசிய கலந்துரையாடலொன்றை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்பதை பங்கேற்பாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

அத்துடன், இமாலயப்பிரகடனத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அளப்பரிய பணியை பௌத்த அமைப்புக்கள், உலகத் தமிழர் பேரவை உட்பட வரையறுக்கப்பட்ட சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றுக்குள் மட்டுப்படுத்தக்கூடாது என்றும் பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொண்டனர்.

மேலும், இமாலயப்பிரகடனத்தினை தேசிய மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான மக்கள் இயக்கமொன்றை உடன் உருவாக்குவதோடு தேசிய உரையடலை முன்னெடுத்துச் செல்லும் பணியை அந்த மக்கள் இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பங்கேற்பாளர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி கோரியுள்ளனமை குறிப்பிடத்தக்கது.





# இலங்கைக்குக் கடத்த மண்டபம் அருகே பதுக்கப்பட்டிருந்த 450 கிலோ கடல் அட்டைகள் பொலிஸாரினால் பறிமுதல்!





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் 50 லட்சம் மதிப்பிலான 450 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் நேற்று அதிகாலை மாவட்ட காவல்துறை தனிப்பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்து கடல் அட்டைகள் அடங்கிய மூட்டைகளை மண்டபம் வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், மண்டபம் வேதாளை, மரைக்காயர் பட்டினம், களிமண்குண்டு, குந்துகால் உள்ளிட்ட கடல் பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை, சமையல் மஞ்சள், பீடி இலை பண்டல்கள் மற்றும் கஞ்சா, மெத்தபெட்டமைன் போன்ற போதைப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள் கடல் வழியாக நாட்டுப்படகில் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று அதிகாலை இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப்பிரிவு பொலிஸாருக்கு மண்டபம் அடுத்த வேதாளை தெற்கு தெருவில் உள்ள வீட்டில் இலங்கைக்கு கடல் வழியாக கடத்துவதற்காகத் தடை செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தனிப்பிரிவு பொலிஸார் குறித்த வீட்டை சுற்றி வளைத்தனர்.

ஆனால் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் பின்புறம் சாக்கு மூடைகளில் பதப்படுத்தப்பட்ட சுமார் 450 கிலோ கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து கடல் அட்டைகளை பறிமுதல் செய்த தனி பிரிவு பொலிஸார் வீட்டின் உரிமையாளர் மீது வழக்கு பதிவு செய்து அவரைத் தேடி வருகின்றனர்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளை மண்டபம் வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகளின் இந்திய மதிப்பில் மதிப்பு ரூ. 50 லட்சம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் புதிய ஆயரை சந்தித்து வாழ்த்திய கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத் தலைவர்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளஅருட்தந்தைஎஸ்.ஞானப் பிரகாசம் அடிகளாரை அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும்,சர்வதேச இசை கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைக்கான தூதுவருமான பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நேரடியாக சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு மன்னார் மடு திருத்தலத்தில் இடம் பெற்றுள்ளது.

அருட்தந்தை எஸ்.ஞானப் பிரகாசம் அடிகளார் மன்னார் மடு திருத்தலத்தின் பரிபாலகராக பணியாற்றி வரும் நிலையில் மடு திருத்தலத்திற்குச் சென்ற அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னான்டோ வாழ்த்துக்களை தெரிவித்து அவருடன் கலந்துரையாடலையும் முன்னெடுத்தார்.



# பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்க அனுமதி அளியுங்கள்!

## நாடாளுமன்றத்தில் நேற்று ரவிகரன் எம்.பி. வலியுறுத்து





**(பா.சதீசன்)**

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பேரவலத்தின் சாட்சியாக, நினைவாலயம் ஒன்று அமைக்கப் படவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்புத் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

2024 நவம்பர் 27 ஆவது நாளில் எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலிகளைச்செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர்.

அந்தவகையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கைத்தீவில் காலங்காலமாக தொடர் இனவழிப்பிற்கு உள்ளாக்கப் பட்டுவரும் தமிழர்கள், 2009?இல் இடம்பெற்ற இறுதிப்போரில் வார்த்தைகளில் வடிக்கமுடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்துவருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்றமாட்டார்களா என்ற ஏக்கத்தில் சின்னஞ் சிறியவர்கள் முதல், பெரியவர்கள்வரை ஏங்கித்தவித்த நிலை, "பசி, பசி" எனக் குழந்தைகள் அழும்போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவலநிலை, பதுங்குகுழிகளைவிட்டு வெளியேவந்தால் தப்ப முடியாது என்றெண்ணி பதுங்கு குழிகளுக்குள்ளேயே தங்கியிருந்த நேரம், அதற்குள்ளேயும் குண்டுகள் விழுந்து உறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலமைகள், ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள்.

இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைப் பலிகொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மனஉளவியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இந்தநிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்துவருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுகூர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர்.

உயிரிழந்தோரை நினைவுகொள்ளும் விதத்தில் உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான தமிழ் இனம், மிக உயர் நாகரீக பண்பாடுகளைக்கொண்டுள்ளது. எம் இன வரலாற்றில் மிக அதிகமான மக்கள் உயிரிழந்த ஓர் அவலம் இது. இவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர ஒரு நினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களுக்கென முல்லைத்தீவில் மட்டுமல்ல, பல இடங்களில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு அதில் உயிரிழந்த ஒவ்வொருவருடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது.

இது காலாகாலத்திற்கும் உயிரிழந்தோரின் உறவுகளையும், சந்ததியினரையும் நினைவுகூர வழிசமைக்கின்றது.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவாகக் கட்டப்படும் ஆலயத்தில் உயிரிழந்தோரின் பெயர்கள் பொறிக்கப்படுவது தத்தமது உறவுகளை காலாகாலத்திற்கும் அவர்களின் சந்ததிகள் நினைவுகூர வசதியாக இருக்கும். எம் இனத்தின் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக அமையும்.

அந்தவகையில் தேசிய பேரவலத்தின் சாட்சியாக நினைவு ஆலயம் முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவுகூருமிடத்தில் அமைக்கப்படவேண்டும்.

இறந்தவர்களை நாங்கள் அடக்கம் செய்யும்போது கல்லறைகளை அதன் மேல் அமைக்கின்றோம். அந்தக்கல்லறைகளில் சம்பந்தப்பட்ட உறவுகள், நினைவுதினங்களில் பால்தெளித்து, படையல்களைப் படைத்து, பூக்கள் சொரிந்து, தீபங்கள் ஏற்றி தங்களுடைய மனக்கவலையை உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தி அழுது ஆற்றுகின்ற அந்த நிலைக்கு எமது மக்களையும் ஈடுபடுவதற்கு ஒரு நினைவாலயத்தை அமைப்பதற்கு எமது மக்களுக்கு அனுமதி தாருங்கள்.

இனப்பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க்காலில்ஓர்நினைவாலயம்அமைப்பதற்கு அனுமதிதாருங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# தி.மு.கவை வீழ்த்த பா.ஜ.கவின் கூட்டணிக்கு அ.தி.மு.க. வரவேண்டும்! தினகரன் அழைப்பு




தி.மு.கவைவீழ்த்தபா.ஜ.க.கூட்டணிக்கு அ.தி.மு.க. வர வேண்டும் என்று எடப் பாடி பழனிசாமிக்கு, அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

மதுரை கோச்சடையில் உள்ள தனியார் விடுதியில் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், 10 சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதன்பின் னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகை யில்,

"ஒரே நாடு ஒரே தேர்தல், நடைமுறைக்கு எப்படி வரும் என தெரியவில்லை. ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு வரும்போது தான் தெரியவரும்.

மத்திய அரசு அ.தி.மு.கவை அழிக்க வேண்டும் என நினைக்கவில்லை. தமி ழகத்தில் அ.தி.மு.க. பலமாக இருக்க வேண்டும் என பா.ஜ.க. நினைக் கிறது. அது ஒன்றுபட்ட அ.தி.மு.கவாக செயல்படவேண்டும்என்பதேபா.ஜ.கவின் எண்ணமாக இருக்கிறது. எடப்பாடி பழனிச்சாமிக்கு அ.தி.மு.கவுக்குள் எதிர்ப்புகள் வந்துள்ளது. அவருடைய செயல்பட்டால் 2026 இற்குப் பிறகு அ.தி.மு.க. இருக்குமா என்ற கேள்வி உள்ளது. 2026 இல் வெற்றி பெறுவோம் என எடப்பாடி பழனிச்சாமி நம்பிக்கை யாக கூறுவது போல தெரியவில்லை. மூடநம்பிக்கையுடன் பேசுவது போல் தெரிகிறது. அவரது செயல்பாடு 2026 ஆம் ஆண்டு தேர்தல் பிற கட்சிகளுக்கு தான் பலனாக அமையும்.

சட்டமன்றதேர்தலுக்குமுன்னர்தேசிய ஜனநாயக கூட்டணிக்கு இன்னும் பல அரசியல் கட்சிகள் வர உள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணி சட்டமன்ற தேர்த லில் வெற்றி பெற்று தமிழகத்தில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைக்கும். பா.ஜ.கவுடன் இணைந்து அ.தி.மு.க. தேர்தலை சந்தித்தால் தான் வெற்றி பெற முடியும். பா.ஜ.க. கூட்டணிக்கு அ.தி.மு.க.வந்தால்நான்ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேன். தி.மு.கவை வீழ்த்த பா.ஜ.க. கூட்டணிக்கு அ.தி.மு.க. வர வேண்டும்," – என்றார்.

# பழனிசாமியை தூக்கத்திலிருந்து எழச் சொல்லுங்கள்! - டி.ஆர்.பி. ராஜா



"2026 இல் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி கனவு காண்கி றார். முதலில் அவரை தூக்கத்திலி ருந்து எழுந்திருக்க சொல்லுங்கள்."

– இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

மதுரை ஐராவதநல்லூரில் நேற்று மண்டல தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில்தி.மு.க.மாநிலதகவல்தொழில் நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத்துறை அமைச்சருமான டிஆர்பி ராஜா பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். பின்னர் அவர் செய்தியா ளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழக முதல்வர், துணை முதல்வ ரின் செயல்பாடுகளை மக்களுக்கு தெரி யப்படுத்தவே எங்களுக்கு நேரம் போத வில்லை. கட்சிக்கு புதிதாக இணையும் இளைஞர்களுக்கு கட்சியின் கொள் கையை கொண்டு சேர்க்கும் பணிகள் நடந்து வருகிறது.

தி.மு.க. தகவல்தொழில்நுட்ப அணி யினர் அவதூறு பரப்புவதாக கூறுவது முற்றிலும் தவறானது. 2026 இல் அ.தி.மு.க. கூட்டணி பெரும் வெற்றி பெறும் என அ.தி.மு.க. பொதுச்செய லாளர் பழனிசாமி கூறுகிறார். முதலில் அவரை தூக்கத்திலிருந்து எழுந்திருக்க சொல்லுங்கள். 2026 சட்டமன்ற தேர் தல் பணிகளை தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் துவங்கி விட்டோம். தமிழக முதல்வர் 200 தொகுதியில் வெற்றி இலக்கு என அறிவித்துள்ளார்.

ஆனால் 234 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணிவெற்றிபெறும்முன்னெ டுப்புகளை தகவல் தொழில்நுட்ப அணி செய்துவருகிறோம். 2026 தேர்தலில் வரலாறு காணாத அளவுக்கு மிகப் பெரும் வெற்றியை பெற்று தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்பார். ஒரே நாடு ஒரே தேர்தல் என்கிற பிற்போக் குத்தனமான பா.ஜ.கவின் எண்ண ஓட்டங்களை தகர்த்தெறியும் அளவுக்கு தமிழக முதல்வர், இந்தியாவில் முதல் ஆளாக களமிறங்கி எதிர்த்து துணிச்ச லோடு நின்று கொண்டிருக்கிறார்.

பா.ஜ.கவின் இத்திட்டத்தை தி.மு.க. முழுமையாக எதிர்க்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளார். இந்தியாவின் அடுத்த தலைமுறையை வளர்த்தெடுக்கும் தேசிய தலைவராக உருவெடுத்து இந் தியாவின் வளர்ச்சியை பற்றி சிந்தித்து வருகிறார். மதுரையில் தனித்துவமிக்க பிரம்மாண்ட டைட்டல் பார்க் கட்டுமான பணி அடிக்கல் நாட்டு விழாவை முதல்வர் தொடங்கி வைக்கவுள்ளார்.

தென்னிந்திய அளவில் மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கும் சிப்காட் தொழில் பூங்கா மதுரைக்கு அருகில் அமையவுள்ளது. தமிழகத்தின் வளர்ச்சியை உலகமே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கி றது. உலக முதலீட்டாளர்கள் இந் தியாவில் முதலீடு செய்வதில் தம ழகத்தில் ஏதுவான சூழல் தற்போது நிலவி வருகிறது. மகத்தான தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் அதிக அளவில் ஏற்படவுள்ளது. இதன் மூலம் தமிழக முதல்வரின் ஒரு ட்ரில்லியன் டொலர் வர்த்தகம் கனவு நிச்சயம் நிறைவேறும்." – என்றார்.



# இஸ்ரேல் - ஹமாஸ் போர்நிறுத்த பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பம்

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர்நிறுத்த பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போர்நிறுத்த பேச்சுவார்த்தையில் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பாலஸ்தீன அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி.சி இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

அதேநேரம், இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரும் குறித்த பேச்சுவார்த்தை முன்னோக்கி செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடந்த வாரங்களில், அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் தங்களது மத்தியஸ்த செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

# 30 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் நகரும் உலகின் மிகப்பெரிய பனிப்பாறை!



உலகின் மிகப்பெரிய பனிப்பாறை என அறியப்படும் A23a சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக எந்த நகர்வும் இல்லாமல் ஒரே இடத்திலிருந்த நிலையில் தற்போது மீண்டும் நகர ஆரம்பித்துள்ளது.

லண்டனில் உள்ள கிரேட்டர் லண்டன் நகரை விட இருமடங்கு பெரிய அளவில் சுமார் ஒரு டிரில்லியன் டன் எடையுள்ள இந்த பனிப்பாறை , 1986 ஆம் ஆண்டு அண்டார்டிகாவின் ஃபில்ச்னர் பனிக் கட்டியிலிருந்து உடைந்தது.

அன்றிலிருந்து, வெட்டெல் கடலில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகில் கடலின் அடிப்பகுதி சேற்றில் சிக்கிக் கொண்டது.

இந்த நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டுஇந்தபனிப்பாறைவடக்குநோக்கி மெதுவாக நகர ஆரம்பித்ததாக விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

தெற்குப் பெருங்கடலுக்குள் அண்டார்டிக் சர்க்கம்போலார் என்ற நீரோட்டத்தைப் பின்தொடர்ந்து இந்த பனிப்பாறை நகரும் என்றும் கூறப்படுகிறது.

இந்த பனிப்பாறை ஜோர்ஜியாவின் தெற்குப் பகுதியை அண்மித்துள்ள துணை அண்டார்டிக் தீவை நோக்கி நகரும் என்றும் அங்கு வெப்பமான நீருடன் சந்திக்கும் யு23ய பனிப்பாறை இறுதியில் சிறிய பனிப்பாறைகளாக உடைந்து பின்னர் உருகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் சீன வெளிவிவகார அமைச்சரும் இன்று சந்திப்பு



இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும் சீனாவின் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இன்று இந்த சந்திப்பு நடைபெறுவதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன

சீன , இந்திய எல்லை விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்படும் என தெரிவிக்கப்படுகிறது

நியாயமான மற்றும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2024




இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் இருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் வீட்டின் புனரமைப்புக்கான வகையில் கட்டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளைத் திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றுக்காக பணத்தை செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாள கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப்பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுரியமாகத் திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம்.




இன்று அதிக பொறுப்பும் பதற்றமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாகப் பதற்ற உணர்வு ஏற்படலாம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களைச் சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்புக்காகவும் புனர் நிர்மானத்துக்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச சினைகளைக் கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் புத்துணர்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமையுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவுக்கு நல்லது.

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தால்போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2024




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.

காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.




இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்களுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனைத் தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர்காலத்துக்காகப் பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாகப் பதற்ற உணர்வுடன் காணப்படுவீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park